**Higher School Certificate (HSC) minimum standard**

Information for parents and carers

# ‘உயர்நிலைப் பாடசாலைச் சான்றிதழ்’ (HSC) குறைந்தபட்சத் தரநிலை

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

அன்புடைய பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு

‘NSW கல்வித் தரநிலைகள் அதிகார’(NSW Education Standards Authority (NESA))த்தினால் அறிமுகப்படுத்தப்படும் ‘உயர்நிலைப் பாடசாலைச் சான்றிதழ்’ (HSC) குறைந்தபட்சத் தர நிலை என்பது NSW மாநிலத்திலுள்ள மாணவ-மாணவிகள் அவர்களுடைய உயர்நிலைப் பாடசாலைச் சான்றிதழைப் பெறுவதற்கு எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களில் குறைந்தபட்சத் தரநிலை ஒன்றை நிரூபித்தாகவேண்டும் என்பதைக் குறிக்கிறது.

வாசிப்பு, எழுத்தாக்கம் மற்றும் எண்ணறிவு ஆகிய மூன்று பகுதிகளிலான ‘குறைந்தபட்ச HSC தரநிலை’ச் சோதனைகளில் மாணவ-மாணவிகள் அமர்வர். இணையவழியிலான ஒவ்வொரு சோதனையும் 45 நிமிடங்களுக்கு நீடிப்பதோடு, பின்வரும் விதங்களில் அவை உருவாக்கப்பட்டிருக்கும்.

- வாசிப்புப் பகுதியில் ஒரு ‘பன்-தெரிவு வினாச் சோதனை’ (multiple-choice test);
- எண்ணறிவுத் திறன் பகுதியில் ‘பன்-தெரிவு வினாச் சோதனை’ஒன்று (multiple-choice test) மற்றும்
- எழுத்து-மூலமான, அல்லது படம் மூலமான துண்டல் ஒன்றை அடிப்படையாகக் கொண்ட (500 வார்த்தைகள் வரைக்குமான) எழுத்தாக்கச் சோதனை ஒன்று.

‘குறைந்தபட்ச HSC தரநிலை’யைப் பெறுவதற்கு மாணவ-மாணவிகள் மூன்று தேர்வுப் பகுதிகளிலும் ‘நிலை 3’ அல்லது ‘நிலை 4’-ஐ அடைந்தாக வேண்டும். இந்தத் தரநிலையை நிரூபிக்கும் மாணவ-மாணவிகள் அன்றாட வாழ்க்கையிலும், வேலைக்காகவும், மேற்படிப்பிற்காகவும் பயன்படுத்தப்படும் நடைமுறையான திறன்களைக் கொண்டவர்களாக இருப்பர் என்பது இதன் பொருளாகும்.

‘ஆண்டு 10’-இல் இருந்து ‘ஆண்டு 12’-இன் இறுதி வரை இந்தத் தேர்வுகளில் அமர்வதற்கான அநேக வாய்ப்புகள் மாணவ-மாணவிகளுக்கு இருக்கும். ஒவ்வொரு சோதனையிலும் மீண்டும் முயற்சிப்பதற்காக அமர்வதற்கு முன்பு காத்திருப்புக் காலம் ஒன்று இருக்கும்.

‘குறைந்தபட்ச HSC தரநிலை’யைப் பூர்த்திசெய்வதில் மாணவ-மாணவிகளுக்குப் பாடசாலைகள் ஆதரவுதவிகளை அளிக்கும். பயிற்சி செய்வதற்கான சோதனைகள் பாடசாலையிலும், மாதிரிக் கேள்விகள் NESA வின் பின்வரும் வலைத்தலப் பக்கத்திலும்  கிடைக்கும்: https://educationstandards.nsw.edu.au/wps/portal/nesa/11-12/hsc/hsc-minimum-standard/online-tests

உங்களுக்கு மேலும் தகவல்கள் தேவைப்படுமானால், தயவுசெய்து பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

உங்களுடைய பிள்ளைக்குக் கூடுதல் தேவைகள் இருப்பதாகவும், ‘குறைந்தபட்ச HSC தரநிலை’ச் சோதனைகளுக்கான மேலதிக ஏற்பாடுகளுக்கு உங்களுடைய பிள்ளை தகுதிபெறுகிறார் என்றும் நீங்கள் நினைத்தால், கீழே சொல்லப்பட்டுள்ள பாடசாலைத் தொடர்பு நபரைத் தொலைபேசி மூலமாக அழையுங்கள்.

பாடசாலைத் தொடர்பு நபரது பெயர்

பாடசாலைத் தொடர்பு நபரது தொலைபேசி இலக்கம்

உங்கள் உண்மையுள்ள

பாடசாலை அதிபர்

பாடசாலையினது பெயர்

### ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’

பாடசாலையுடன் தொடர்புகொள்வதில் உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450-இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யை அழைத்து உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி இலக்கத்தினைத் தொலைபேசி இயக்குநருக்குக் கொடுங்கள், அதையடுத்து உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.